FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348034/DC/2025/TVL

1. District : Thirunelveli PS: VOPC. Year: 2025 FIR No.: 06/DC/2025/TVL Date: 02.05.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்: 7 of The Prevention
(ii) Act சட்டம்: Corruption Act-1988 Sections பிரிவுகள்: of Corruption Act-1988
(iii) Act சட்டம்: (as amended in 2018) Sections பிரிவுகள்: (as amended in 2018)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.04.2025 Date to : at about 07.00 pm at her Residence.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 29.04.2025 at about 13.30hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 02.05.2025 Time : 08.00hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time : 08.00hrs & 09.30 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02.05.2025 நேரம்

Seen 2/5/25

4. Type of Information : Written/ Oral / Electronic form : Oral statement given by the complainant
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் and recorded by me as complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Tirutani, Pallavan Bank near, 37 kms, west,
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : —
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

Seen 02/5/25

6. Complainant /Informant (a) Name : Tr. D. Madhusudhanan (b) Father's/ Husband's Name : Duraisamy.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth: 57 yrs (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : No.8, Samathuvapuram, Perarignar
தொழில் முகவரி Anna salai, Veeraganallur, Dhadur post, Tiruttani Tk, Thiruvallur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. Kotteeswari, Village Administrative officer, Veeraganallur, Tiruttani Tk, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
by the complainant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs. 3000/- each from 25 residents initially to process and give the computer patta Orders

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :- When, I present at Thiruvallur VOAC, office, on 09.05.2025 at 08.00hrs; one complainant Tr. D. Madhusudhanan Age 57, S/o Duraisamy, No.8, Samathuvapuram, Perarignar Anna Salai, Veeraganallur, Village, Dhadeer post, Tiruttani Tk, Thiruvallur District appeared before me and gave oral complaint against the accused Tmt. Kothaiyammal, Village Administrative officer, Veeraganallur, Tiruttani Tk, Thiruvallur District, and the same oral complaint was recorded by me it as follows :-

[FIR contents will follow in the next separate page....

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 9/05/2025
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

09.05.2025 at

Name: பெயர் S. Mala,
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police
VOAC, Thiruvallur.

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.06/AC/2025/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

பணிந்து அனுப்பப்படுகிறது. திரு.D.மதுசூதனன் வயது 57, த/பெ துரைசாமி, No.8, சமத்துவபுரம், பேரறிஞர் அண்ணாசாலை, வீரகநல்லூர் கிராமம், தாடூர் அஞ்சல், திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவர் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு இன்று 02.05.2025-ம் தேதி காலை 08.00 மணிக்கு ஆஜராகி வாய் மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலம். நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் அரசால் மேற்கொள்ளப்படும் சாலை மற்றும் கட்டிட வேலைகளை சப்-காண்டிராக்ட் எடுத்து வேலைகள் செய்து வருகிறேன். எங்கள் ஊரில் சமத்துவபுரத்தில் 100 வீடுகள் கட்டப்பட்டு, 2010ஆம் வருடம் ஜீலை மாதம் பணிகள் முடிக்கப்பட்டு, பயனாளிகளுக்கு வீடுகள் ஒப்படைக்கப்பட்டன. வீடுகள் ஒப்படைக்கப்பட்ட போது பயனாளிகள் அனைவருக்கும் அரசாங்கத்தால் அனுபந்தம் பட்டா வழங்கப்பட்டது. சமத்துவபுரத்தில் வீட்டு எண்.8 ல் நான் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். சமத்துவபுரம் குடியிருப்பாளர்கள் சங்கம் தொடங்கி நான் அதன் செயலாளராக உள்ளேன். எனவே சமத்துவபுரத்தில் குடியிருப்பவர்களுக்கு ஏதேனும் உதவி என்றால் நான் செய்து கொடுப்பேன். சமத்துவபுரத்தில் குடியிருப்பவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அனுபந்தம் பட்டாவினை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணத்தில் பதிவேற்றம் செய்து, கணினி பட்டா வழங்குமாறு கடந்த 2023 ஆம் ஆண்டு முதல் நான் வருவாய்துறை அதிகாரிகளிடம் மனு கொடுத்து வருகிறேன். கடந்த 08.11.2024 ஆம் தேதியன்று நான் திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலரை சந்தித்து, எங்களுடைய அனுபந்தம் பட்டாவினை கிராம கணக்கில் பதிவேற்றம் செய்து, கணினி பட்டா வழங்க கேட்டு மனு கொடுத்து வந்தேன். 27.01.2025 ஆம் தேதி, திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் அலுவகத்திலிருந்து என்னுடைய மனுவை, நடவடிக்கை எடுப்பதற்காக திருத்தணி கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதற்கான கடிதத்தின் நகல் ஒன்று எனக்கு தபால் மூலம் அனுப்பியிருந்தார்கள். அதன்பின்னர் 03.03.2025 ஆம் தேதி, திருத்தணி கோட்டாட்சியர் அலுவகத்திலிருந்து என்னுடைய மனுவை, நடவடிக்கை எடுப்பதற்காக திருத்தணி வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதற்கான கடிதத்தின் நகல் ஒன்று எனக்கு தபால் மூலம் அனுப்பியிருந்தார்கள். நான் கடந்த 15 நாட்களுக்கு முன்னர்

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.06/AC/2025/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

திருத்தணி வட்டாட்சியர் அலுவலகம் சென்று வட்டாட்சியர் அவர்களை சந்தித்து, எங்களுக்கு பட்டா வழங்குவது குறித்து கேட்ட போது, உங்க ஊர் கிராம நிர்வாக அலுவலரை போய் பாருங்கள், பட்டா வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவரிடம் கூறியுள்ளதாக சொன்னார். அதன்பின்னர் ஒருநாள் நான வீரகநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் சென்று கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கோட்டீஸ்வரி அவர்களை சந்தித்து, அனுபந்தம் பட்டாவினை கிராம கணக்கில் பதிவேற்றம் செய்து, கணினி பட்டா வழங்குவது குறித்து கேட்ட போது, சும்மா பட்டா கிடைச்சுடுமா, காசு கொடுத்தால் தான் வேலை நடக்கும் என்றும், நான் போன் செய்கிறேன் அப்போது வந்து என்னை பாருங்கள் என்று சொன்னார். 23.04.2025 ஆம் தேதி நான் திருவள்ளூரில் உள்ள அரசு மருத்துவனைக்கு வந்துவிட்டு, வீட்டுக்கு இரயிலில் சென்று கொண்டிருந்த போது, மதியம் சுமார் 1.15 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கோட்டீஸ்வரி அவர்கள் எனக்கு போன் செய்து பட்டா கொடுப்பது சம்மந்தமாக நடிவடிக்கை எடுக்குமாறு வட்டாட்சியர் சொல்லியுள்ளதாகவும் எனவே அவரை சந்திக்க வருமாறு சொன்னார். நான் மாலை வந்து சந்திப்பதாக சொன்னேன். மாலை சுமார் 5 மணிக்கு நான் கிராம நிர்வாக அலுவலருக்கு போன் செய்த போது, மாலை 7 மணியளவில் தனது வீட்டுக்கு வந்து அவரை சந்திக்க சொன்னார். நான் அன்று மாலை 7 மணியளவில் திருத்தணி சுப்ரமணியம் நகரில் உள்ள கிராம நிர்வாக அலுவலரின் வீட்டுக்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கோட்டீஸ்வரி அவர்களை சந்தித்த போது, பட்டா வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், ஒரு வீட்டிற்கு ரூ.5000/- என கலெக்ட் செய்து தனக்கு கொடுத்தால், உடனே வேலையை முடித்து பட்டாவினை கொடுத்துவிடுவதாகவும் கூறினார். அவர் லஞ்சமாக தான் பணம் கேட்கிறார் என தெரிந்து கொண்டேன். நான் அனைவரிடமும் கேட்டுவிட்டு சொல்வதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். 29.04.2025 ஆம் தேதி காலை சுமார் 8.50 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கோட்டீஸ்வரி அவர்கள் எனக்கு போன் செய்து அவரை சந்திக்க வருமாறு சொன்னார். அதன்படி நான் மதியம் சுமார் மதியம் 12.30 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்ற போது அவர் அலுவலகத்தில் இல்லை. நான் அவருக்கு போன் செய்த போது, அவர் திருத்தணி பல்லவன் பேங்க் அருகே உள்ளதாகவும் அங்கு வருமாறு சொன்னார். எனவே நான் மதியம் சுமார் 1.30 மணியளவில், திருத்தணி பல்லவன் பேங்க் அருகே

(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.06/AC/2025/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

சென்று அவரை சந்தித்த போது, எல்லோர்கிட்டயும் பணம் கலெக்ட் பண்ணிட்டீங்களானு கேட்டார். நான் அவரிடம், அனைவரும் ரொம்ப கஷ்டபடுறாங்க பணம் கொடுக்க இயலாத சூழ்நிலையில் உள்ளார்கள் என சொன்னேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் அவர்கள், முன்பு அவர் கேட்டிருந்த பணத்திலிருந்து குறைத்து, அப்படியென்றால் ஒரு வீட்டிற்கு ரூ.3,000/- என கலெக்ட் பண்னுமாறும் முதலில் 25 நபர்களுக்கான பணத்தை வெள்ளிக்கிழமையன்று (02.05.2025) கொண்டு வந்து கொடுக்குமாறும், வரும்போது போன் செய்துவிட்டு வருமாறு கூறினார். நானும் சரியென்று கூறிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் கிராம நிர்வாக அலுவலருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து சமத்துவபுரத்தில் குடியிருக்கும் அனைவருக்கும் கணினி பட்டா பெற எனக்கு விருப்பம் இல்லை. எனவே சமத்துவபுரத்தில் குடியிருப்பவர்களிடம் கிராம நிர்வாக அலுவலர் நம்முடைய பெயரில் உள்ள அனுபந்தம் பட்டாவினை கிராம கணக்கில் ஏற்றி கணினி பட்டா வழங்க ஒரு வீட்டிற்கு ரூ.3000/- லஞ்சமாக கேட்கிறார் என்றும், முதலில் 25 நபர்களுக்கான பணத்தை கொண்டு வந்த கொடுக்க சொல்கிறார் என்ற விபரத்தை சொன்னேன். எனக்கும் சமத்துவபுரத்தில் குடியிருப்பவர்களுக்கும் லஞ்சமாக பணம் கொடுத்து, கணினி பட்டா பெற எனக்கு விருப்பம் இல்லை என்பதால் நாங்கள் இதுப்பற்றி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளிக்கலாம் என்று முடிவு செய்தோம். புகார் கொடுப்பதற்கான வேலையை என்னை செய்யுமாறு சொல்லி, 24 நபர்கள் தலா ரூ.3000/-த்தை என்னிடம் கொடுத்தார்கள். என்னுடன் சேர்த்து 25 நபர்களுக்கான பணம் ரூ.75,000/- எடுத்துக்கொண்டு இன்று 02.05.2025 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து வாய்மொழியாக, கிராம நிர்வாக அலுவலர் திருமதி.கோட்டீஸ்வரி அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்ககேட்டு புகார் செய்தேன். தங்களுடைய சட்டப்படியான நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு தமிழ் மற்றும் தெலுங்கு மொழி பேச தெரியும். எழுத தெரியாது என்பதால், நான் எனது புகாரை வாய்மொழியாக சொல்ல சொல்ல காவல் ஆய்வாளர் ஆகிய தாங்கள் கம்பியூட்டரில் ஒரு புகார் வாக்குமூலமாக டைப் செய்து பிரிண்ட் எடுத்து, எனக்கு படித்து காண்பித்தீர்கள். நான் சொன்னபடி சரியாக உள்ளது. SdXXX D.Madhusudhanan 02.05.2025.

Sir, The oral statement of the complainant was recorded by me. SdXXX(S.Mala), 02.05.2025.

Honoured Madam,

The oral statement of the complainant was recorded by me at about 08.00 hrs and 08.30 hrs and after getting proper permission from DVAC on this complaint enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the enquiry, the antecedents of the accused, the reputation of the accused and genuineness of the complainant are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.6/AC/2025/TVL u/s. 7 of The Prevention of Corruption Act-1988 (as amended in 2018) on 02.05.2025 at about 09.30 hrs.

The original complaint and FIR are sent to the court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies to the concern officers of DVAC on 02.05.2025.

S. Mala 2/05/2025

(S.MALA),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.